<u>சிறப்பு நீதிமன்றம் எண். **II**, ஜெயங்கொண்டம்</u>

**<u>OS.38/2020</u>**

2020 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 10ம் நாள் வா.சா.1 வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54 வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. சொ. அமிர்தலிங்கம், இளநிலை உதவியாளர் (பொறுப்பு பெஞ்ச் கிளார்க்) என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

---

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சிவசங்கரி | வட்டம் | : | உடையார்பாளையம் |
| க.பெ. | : | மணிகண்டன் | சமயம் | : | இந்து |
| கிராமம் | : | நெட்டலகுறிச்சி | தொழில் | : | நர்ஸ் |
| வயது | : | **34/2020** | சாதி | : | வன்னியர் |

---

<u>1,2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் டிப்ளமோ நர்ஸிங் பட்டயப்படிப்பு படித்துள்ளேன். 3ம் பிரதிவாதி என்னுடைய தாயார். அவர் என்னுடைய கட்சியை அனுசரித்து எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றும், அவரும் பாகம் கேட்டு நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளார் என்றால் சரிதான். என்னுடைய தகப்பனார் கலியபெருமாள் கடந்த 31.03.2000ம் தேதியில் இறந்துவிட்டார் என்றால் சரிதான். என் தகப்பனார் காவல் துறையில் காவலராக பணிபுரிந்தார் என்றால் சரிதான். என் தகப்பானார் 1980ல் காவல் துறையில் பணிக்கு சேர்ந்ததார் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் அனைத்தும் பூர்வீக சொத்துக்கள் என்பது தான் என் தரப்பு கட்சி ஆகும். என் அப்பாவிற்கு நானும், என் சகோதரன் கார்த்திகேயன், 3ம் பிரதிவாதியான என் தாயார் மலர்கொடி ஆகிய மூவர் தான் வாரிசு என்றால் சரிதான். தாவா சொத்துக்களில் 1 முதல் 8 அயிட்ட சொத்துக்கள் சாகுபடி செய்யக்கூடிய நிலங்கள் என்றால் சரிதான். 9 முதல் 13 வரையிலான அயிட்ட சொத்துக்களும் சாகுபடி செய்யக்கூடிய நிலங்கள் என்றால் சரிதான். 1 முதல் 13 அயிட்ட சொத்துக்கள் அணிக்குதிச்சான் மஜிரா நெட்டலங்குறிச்சி கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். 14வது அயிட்ட சொத்து விளந்தை கிராமத்தில் உள்ள வீட்டுமனையிடம் என்றால்

சரிதான். 15 வது அயிட்ட சொத்து பெரம்பலூர் மாவட்டம் சிறுவாச்சூரில் உள்ள வீட்டுமனையிடம் என்றால் சரிதான். 9, 10 வது அயிட்ட சொத்து என் அண்ணன் இளவராக இருந்த போது 08.08.1996 ம் தேதியில் என் அம்மாவை கார்டியனாக காட்டி கிரையம் வாங்கப்பட்டது என்றால் சரிதான்.

2. 11 வது அயிட்ட சொத்து 03.02.1999 ம் தேதியில் என் அண்ணன் மைனராக இருந்தபோது என் தாயார் கார்டியனாக காட்டி வாங்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். 12 வது அயிட்ட சொத்து 23.04.2008 ம் தேதியில் என் அண்ணன் மேஜரான பின்னர் அவர் பெயரில் கிரையம் வாங்கிய சொத்து என்றால் சரிதான். 13 ம் அயிட்ட சொத்து 28.09.1998 ல் என் அப்பா பெயரில் கிரையம் வாங்கிய சொத்து என்றால் சரிதான். மேற்படி சொத்துக்கள் எல்லாம் என் அப்பா காவல் துறையில் பணிக்கு சேர்ந்த பிறகு கிரையம் வாங்கிய சொத்து என்றால் சரிதான். 1 முதல் 8 அயிட்ட சொத்துக்களின் விஸ்தீரணம் 2.61.5 ஏக்கர் என்றால் சரிதான். மேற்படி நிலங்கள் பாசன நிலங்கள் இல்லை என்றும், மானாவரி நிலங்கள் என்றால் சரிதான். தற்போது அனைத்தும் நிலங்களும் தரிசாக தான் உள்ளது. மேற்படி 2.61.5 ஏக்கரில் தோராயமாக எவ்வளவு ஆண்டு வருமானம் கிடைக்கும் என்று தெரியாது. தாவா 9,10,11,12,14 ஆகிய அயிட்ட சொத்துக்கள் எனது அண்ணன் கார்த்திகேயனுக்கு மட்டும் தனிப்பட்ட வகையில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல. 13 வது அயிட்ட சொத்தை என் அப்பாவிற்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்றால் சரிதான். என் அண்ணன் கார்த்திகேயன் பெயரில் வாங்கப்பட்ட சொத்துக்கள் எல்லாம் என் அப்பா காவலராக பணிபுரிந்து அதன் மூலம் கிடைத்த வருமானத்தை கொண்டு வாங்கப்பட்ட சொத்து என்றும், பூர்வீக சொத்தில் கிடைத்த வருவாயை கொண்டு வாங்கப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா 9 முதல் 13 அயிட்ட சொத்துக்கள் என் அப்பா உயிருடன் இருக்கும்போதே வாங்கப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான்.

3. பூர்வீக சொத்துக்கள் எல்லாம் வானம் பார்த்த தரிசான பூமிகள் என்றும், அதன் மூலம் வருவாய் எதுவும் கிடைக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா 14 வது அயிட்ட சொத்தான விளந்தையில் உள்ள மனையிடமானது 12.06.2003 ம் தேதியில் என் அண்ணன் கார்த்திக்கேயன் பெயரில் வாங்கப்பட்டது என்றால் சரிதான். பெரம்பலூர் மாவட்டம் சிறுவாச்சூரில் உள்ள தாவா 15 வது அயிட்ட சொத்து 09.10.2009 ம் தேதியில் 1 ம் பிரதிவாதி மற்றும் மைனர் 2 ம் பிரதிவாதி பெயரில்

வாங்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி பெயரில் வாங்கப்பட்ட சொத்தானது 1ம் பிரதிவாதியின் சேமிப்பு மற்றும் அவருக்கு சீர்வரிசையாக கிடைத்த வருமானத்தை கொண்டு வாங்கப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. என் தந்தை காவலாராக மீன்சுருட்டி காவல்நிலையத்தில் பணிபுரிந்தார் என்றால் சரிதான். என் அப்பா இறந்த பிறகு என் அண்ணன் கார்த்திகேயனுக்கு கருணை அடிப்படையில் காவல் துறையில் பணி வழங்கினார்கள் என்றால் சரிதான். 2006ம் வருடம் என் அண்ணனுக்கு பணி வழங்கினார்கள். என் அண்ணன் ஒரு வருடம் மீன்சுருட்டி காவல் நிலையத்தில் பணிபுரிந்து விட்டு பெரம்பலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு பணிமாறுதலில் சென்றுவிட்டார். என் அண்ணன் கார்த்திகேயன் 07.08.2017ல் இறந்துவிட்டார். என் அண்ணன் இருந்தவரை என் அம்மா, அண்ணி எல்லாம் ஒரே குடும்பமாகத் தான் இருந்தார்கள். என் அண்ணன் இறந்த பிறகு என் அம்மா என்னுடன் இருந்து வருகிறார். நான் பெரம்பலூரில் குடியிருந்து வருகிறேன். என் அண்ணன் திருமணம் 2009ம் வருடம் 1ம் பிரதிவாதியுடன் நடந்தது. என் திருமணம் 2010ல் நடந்தது. என் அண்ணன் தான் எனக்கு திருமணம் செய்து வைத்தார். திருக்களப்பூர் கிராமத்தில் உள்ள 1.45 ஏக்கர் நிலத்தை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். அந்த நிலத்தை இந்த வழக்கில் சேர்க்காததற்கான காரணம் எனக்கு தெரியாது. எங்கள் ஊரில் அழகன் மகன் பாலச்சந்திரன் என்பவர் உள்ளார். அவர் பெரம்பலூர் மாவட்ட பாட்டாளி மக்கள் கட்சி மாவட்டத் தலைவரின் அக்காவின் கணவர் என்றால் சரிதான். எனக்கு சீர்வரிசை செய்து விமர்சையாக திருமணம் செய்தார்கள் என்றால் சரிதான். திருக்களப்பூர் கிராமத்தில் உள்ள 1.45 ஏக்கர் நிலத்தை மேற்படி பாலச்சந்திரன் என்பவருக்கு விற்பனை செய்து அந்த பணத்தை கொண்டு தான் என்னுடைய திருமணத்தை விமர்சையாக நடத்தினார்கள் என்றால் சரிதான். அதனால் அந்த நிலத்தை இந்த வழக்கில் சேர்க்கவில்லை. அந்த கிரையம் வாய்மொழி கிரையம் ஆகும். பத்திரம் எதுவும் எழுதி பதிவு செய்யப்படவில்லை. என்னுடைய திருமணத்திற்கு மேற்படி 1.45 ஏக்கர் நிலத்தை விற்பனை செய்து விமர்சையாக திருமணம் செய்து வைத்தால் மற்ற சொத்துக்களில் எனக்கு பாகம் வேண்டாம் என்று சொல்லி எனது உரிமையை விட்டுக்கொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல.

4. என்னுடைய உரிமையை விட்டுக்கொடுத்துவிட்டதனால் தான் 1.45 ஏக்கர் நிலத்தை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. குடும்ப சொத்துக்களில் 1.45 ஏக்கர் நிலத்தை தாவா சொத்தாக சேர்க்காமல் விட்டுவிட்டதால் இந்த வழக்கு

பகுதி பாக பிரிவினைக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக 1, 2ம் பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அந்த நிலமானது வாய்மொழியாக விற்பனை செய்துவிட்டதால் அதனை சேர்க்கவில்லை. வாய்மொழியாக விற்பனை செய்துவிட்டோம் என்பதை பொறுத்து 1, 2 பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்த பிறகு மறுப்புரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2010 முதல் பாலச்சந்திரன் தான் அந்த 1.45 ஏக்கர் பூமியை அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். அந்த நிலமானது தோராயமாக 1 லட்சத்திற்கு கிரையம் கொடுக்கப்பட்டது. அதே நிலத்தை 16.05.2019ம் தேதியில் நானும் எனது அம்மா 1ம் பிரதிவாதி ஆகிய மூன்று பேரும் சேர்ந்து என் சித்தப்பா சின்னதுரை என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். மேற்படி 1.45 ஏக்கர் நிலமானது என் சித்தப்பா சின்னதுரை என்பவருக்கு கிரையம் கொடுத்த கிரையப்பத்திரத்தின் நகல் என்னிடம் காட்டப்படுவது தான் அதில் கண்ட தொகை எதையும் நாங்கள் பெற்றுக்கொள்ளவில்லை என்றால் சரிதான். அந்த கிரைய ஆவணம் சான்று நகல் பி.த.சா.ஆ.1 ஆகும். மேற்படி கிரையமானது பாலச்சந்திரன் சொன்னதின் பெயரில் சின்னதுரைக்கு கொடுத்தோம். கிரையத்தொகை முழுவதும் பாலச்சந்தர் பெற்றுக்கொண்டார். பாலச்சந்தர் 1ம் பிரதிவாதியை மிரட்டி தான் கிரையப்பத்திரத்தில் கையெழுத்து வாங்கிக்கொண்டார் என்றால் சரியல்ல. என் அம்மாவிற்கு 1/3 பங்கு பாத்தியம் என்ற விவரம் எனக்கு தெரியாது. தாவா தாக்கல் செய்வதற்கு முன்பாகவே என் தகப்பனார் 2000ம் ஆண்டு இறந்துவிட்டதால் திருத்தப்பட்ட இந்து வாரிசுரிமைச் சட்டம் 2005ன் படி தாவா சொத்து கூட்டு பங்குரிமை சொத்தாக கருதி எனக்கு 1/3 பாகம் கிடைக்காது என்றால் சரியல்ல.

5. இந்த வழக்கில் வா.த.சா.ஆ.1 முதல் 7 வரையிலான அசல் ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளேன். அந்த ஆவணங்கள் எனக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் என் அம்மாவிடமிருந்து பெற்று தாக்கல் செய்துள்ளேன். என் அண்ணன் இறந்த தகவல் கிடைத்தவுடன் நான், என் அம்மா, என் கணவர் ஆகிய மூன்று பேரும் பெரம்பலூர் சென்று என் அண்ணன் வீட்டிலிருந்த ஆவணங்கள், நகைகள் ஆகியவற்றை 1ம் பிரதிவாதியின் அனுமதியோடு பாதுகாப்பிற்காக எடுத்து வந்தோம் என்றால் சரியல்ல. என் திருமணத்திற்கு பின்னிட்டு வாய்மொழியாக தாவா சொத்தில் உள்ள உரிமையை விட்டுக்கொடுத்துவிட்டு என் அண்ணன் இறப்பிற்கு பின்னிட்டு சொத்து மீது ஆசை ஏற்பட்டுள்ளதால் இந்த பாக வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. குடும்பச் சொத்துக்களில் என் அண்ணன்

இருக்கும்போதே என்னுடைய பாக உரிமையை விட்டுக்கொடுத்துவிட்டதால் எனக்கு தாவா சொத்துக்களில் பாகம் கிடைக்கக்கூடியதல்ல என்றும், தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றும் சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.